தலைப்பு 187 - முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 187 – முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை முதலீட்டு மேம்பாட்டு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும்

பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத்

தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மூலதன செலவினம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிச் செயலாற்றல் கூற்றில் (ACA-F) மூலதன சொத்துக்களை கைப்பற்றல் செலவினம் ரூபா 223,152,569 ஆக இருந்த போதிலும் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-6) அது ரூபா 220,331,542 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் கைப்பெற்றல் (Purchases) ரூபா 2,821,027 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள வேறுபாட்டில் 187-2-4-9-2105 காணி மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்தலின் கீழ் மாங்குளம், காங்கேசன்துறை மற்றும் பரந்தரன் போன்ற முதலீட்டு வலயங்களில் ஸ்தாபிப்பதற்காக முறையே முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கியதன் காரணமாகவே ஏற்பட்டிருந்தது. முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சிற்கு உரித்தற்ற சொத்துக்கள் ஆனமையால் உரிய மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகங் களால் அந்த சொத்துக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.	மூலதன செலவினங்கள் கைப்பற்றல் செலவினத்திற்குரிய சொத்துக்கள் நிதி அல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) முற்பணக் கணக்கு மீதி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் அமைச்சு உலக வர்த்தக நிலையத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 21,293,616 ஆன உலக வர்த்தக நிலைய கட்டிடத்தில் வாடகை முற்பணத்தை தீர்த்து வைக்காமையின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் வேலை மற்றும் முற்பணம் (ACA-5(a)) இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு உலக வர்த்தக நிலைய கட்டிடத்தில் இருந்து 2025 பெப்ரவரி 20 ஆந் திகதி விலகியிருந்ததுடன் அந்த கட்டடம் வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு உரிய அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. அதன் போது மிகுதி 01 மாதம் 20 நாட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு மீண்டும் அமைச்சரவை அங்கீகாரம் தேவையாகும். நிறுவனத்திற்காக மேலும் செலுத்துவதற்குள்ள செலவினங்கள் கழிக்கப்பட்ட பின்னர் மிகுதித் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்காக இதுவரையில் அமைச்சரவை விஞ்ஞாபனம் நிதி அமைச்சரால் தயாரிக்கப்படுவதுடன் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு தீர்த்துவைக்க முடியும்.	அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டில் மதிப்பீட்டில்	முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சிற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் முதலீட்டிற்கு சாதகமான	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமான

	இருந்து ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 14,850,000 தேறிய நிதி ஏற்பாட்டில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சூழல் ஒன்றை கட்டியெழுப் புவதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாடு கோரிக்கை சமர்ப்பிக்கப்ப டாதிருந்த மையாலும், தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2024 என்ற மூலதன செலவினங்களை முகாமைத்துவம் செய்யப் பட்டமையாலும் புதிய தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் போன்றவையை குறைக்க வேண்டியேற்பட்டிருந்தமை யாலும் மூலதன நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வில்லை.	வரை முழுமையாகவும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	09 மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 04 மூலதன செலவின விடயங்களுக்காக வழங்கப்பட் டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 50,350,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 6,669,225 அதாவது 13 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.	நிதி எற்பாடு வழங்கப்பட்டி ருந்த போதிலும் தேவையின் அடிப்படையில் செலவினங்க ளைச் செய்தல் மற்றும் அமைச்சின் பணிகள் 2024 செப்டெம்பர் மாதம் முதல் முறையாக அமுல்படுத்தப்படா திருந்தமையின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டி ருந்தது.	மேற்படி

3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியி ருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை	கருத்து தெரிவிக்கப்படவில் லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.		
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருந்தமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	மேற்படி

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

அவதானிப்புக்கள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தி	மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2024 திசம்பர் 31 ஆந் திகதிக்கு முன் இந்த அமைச்சை மூடும் நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டியிருந்தமையால் பொருள் மெய்மை ஆய்வுப் பணிகள் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மை ஆய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
இலங்கை முதலீட்டு சபையில் முதலீடு அங்கீகரிக்கும் செயற்பாடு களை விரைவுபடுத்துவதற்காக SWIFT முறைமையை அமுல் படுத்துவதற்காக பாதீட்டின் மூலம் ரூபா 10,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அதன் பூர்த்தி செய்தல் 50 சதவீதம் மாத்திரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த செயற்பாடுகளின் நடவடிக்கைகள் இலங்கை முதலீட்டு சபையில் நிறைவேற் றப்பட்டதுடன் அமைச்சின் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை விரைவுபடுத்து வதற்காக அமைச்சு செயலாளரினால் பல சந்தர்ப்பங்களின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்பாடுகள் முடிவடையாதிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடும் செலவிடப்படவில்லை.	திட்டமிடப்பட்ட பணிகளை செயற் திறனாக நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கீழ் சான்றிதழ் பத்திர பாடநெறி மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் 10 இற்கும் மற்றும் இணையவழி மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பம் தொடர்பான 04 செயலமர்வுகளுக்கு 320 மாணவர்களைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 02 பாடநெறிகள் மற்றும் ஒரு செயலமர்விற்கு பதிவு செய்திருந்தவர்களின் மாணவர்களின் எண்ணிக்கை 92 அதாவது 29 சதவீதம் ஆகும். 2019 ஆம் ஆண்டில் 336 ஆன பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டு வரையில் 92 வரை அதாவது 72 சதவீதத்தால் குறைவடைந் திருந்திருந்தமை மேலும்	பதிலளிக்கப்பட வில்லை.	தகவல் தொழில்நுட்ப பூங்காக்களின் செயற்படு நிலை தொடர்பாக அமைச்சினது முழுமையான மேற் பார்வை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கீழ் 10 பாடநெறிகளுக்காக எதிர்பார்த்த மாணவர்களின் எண்ணிக்கை 350 ஆக இருந்த போதிலும் 02 பாடநெறிகளுக்காக பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 64 ஆகும். மேலும் அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்குரிய 02 பாடநெறிகளின் கீழ் 50 மாணவர்களை பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொருவரும் பதிவு செய்திருக்கவில்லை.		
(ஆ)	யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பூங்கா இரண்டும் மீளாய்வாண்டின் போதும் எதிர்பார்க்கப்பட்ட பாடநெறிக் கட்டணம் முறையே ரூபா 1,129,000 மற்றும் ரூபா 2,625,000 ஆக இருந்த போதிலும் பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாகக் கொண்டு அரசாங்க வருமானத்தில் சேகரிக்கப்படக் கூடியதாக இருந்து யாழ்ப்பாணப் பூங்காவில் ரூபா 107,220 தொகையும் மன்னார் பூங்காவில் ரூபா 818,560 தொகையும் ஆகக் காணப்பட்டது. இந்த பூங்கா பராமரிப்பு மற்றும் பாடநெறி நடாத்துவதற்காக மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்காக செலவிடப்பட்ட கிரயம் முறையே ரூபா 7,977,856 மற்றும் ரூபா 7,318,591 ஆகும். அதன் பிரகாரம் இரண்டு பூங்காவிலும் 156 மாணவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தை விட ரூபா 14,370,667 அதிகமாக செலவிடப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்பட வில்லை	மேற்படி
(இ)	இந்த தகவல் தொழில்நுட்ப பூங்கா ஸ்தாபிக்கும் நோக்கமாக சமூகங்களுக் கிடையே ஆரம்ப கணனி அறிவை விரிவு படுத்துதல், குறைந்த கிரயத்தின் கீழ் இணையதள வசதிகளை வழங்குதன் மூலம் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல், பிரதேசத்தில் வறுமை யில் உள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு கணனி பயிற்சி இலவசமாக வழங்குவதாக இருந்த போதிலும் கணனிப் பயிற்சி இலவசமாக வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது அவ்வாறான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட வில்லை	மேற்படி

4.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	டெக்நோ பார்க் டெவலப்மெண்ட் பிரைவட் லிமிட்டெட் கம்பனி 2021 செப்டெம்பர் 29 ஆந் திகதி அரசாங்கத் தின் முழுமையான பங்கு உரிமையுடைய கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டு இலக்கம் 2289/43 மற்றும் 2022 யூலை 14 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு முதல் இதுரை செயற்படாதிருந்ததுடன் அத் திகதியில் இருந்து ஒவ்வொரு நிதியாண்டிற்கும் உரிய அந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை.	பதிலளிக்கப் படவில்லை.	நிதிக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அமைச்சரவை செயலாளரின் இலக்கம் 21/1641/301/020 மற்றும் 2021 செப்டெம்பர் 07 ஆம் திகதிய அமைச்சர வைத் தீர்மானத்தை அறிவிக்கும் கடிதத்தின் பிரகாரம் காலி, குருணாகல், கண்டி மற்றும் நுவரெலியா என்ற பிரதேசங்களில் முன்மொழியப்பட்ட 04 தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் காலி மற்றும் குருணாகல் தொழில்நுட்ப பூங்கா மாத்திரம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் டெக்ணோ பாக் டெவெலப்மெண்ட் பிரைவெட் டிலிட்டெட் கம்பனியால் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. எனினும் 2022 ஏப்ரல் வரையிலும் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இந்த நிர்மாணங்கள் நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்ததுடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் மீண்டும் நிர்மாணங்கள் ஆரம்பித்தல் அல்லது அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.	பதிலளிக்கப் படவில்லை.	செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	காலி மற்றும் குருணாகல் தொழில்நுட்ப பூங்கா நிர்மாணிப்பதற்காக முற்பணம் செலுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது மக்கள் வங்கியிலிருந்தும், தேசிய சேமிப்பு வங்கியிலிருநதும் ரூபா 750,000,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 1,500,000,000 கடன் தொகையொன்று டெக்னோ பார்க் டெவெலப்மெண்ட் பிரைவெட் டிலிட்டெட் கம்பனியால் பெறப்பட்டிருந்ததுடன் அந்தக் பணம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டிக்காக பொது திறைசேரி பிணையாக இருந்ததாக கடன் உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டி ருந்தது. கடன் பணத்தை செலுத்துவதற்காக இரண்டு வருட சலுகைக் காலம் வழங்கி இதுவரையிலும் அந்த சலுகைக் கடந்திருந்த போதிலும் அந்தக் கடன் தவணைப் பணம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்படாதிருந்ததுடன் மக்கள் வங்கியில் இருந்து 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்தக் கடனின் அடிப்படையிலான வட்டியாக ரூபா 477,995,343 தொகையும், தாமத வட்டிக் கட்டணத்திற்குரியதாக உரிய அறவிடலாக ரூபா 3,590,838 தொகையும் ஆக வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த பணமாக ரூபா 1,231,586,181 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. தேசிய சேமிப்பு வங்கிலிருந்தான கடனுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் அரையாண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகை தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	பதிலளிக்கப் படவில்லை.	உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மேற்கூறப்பட்ட நிர்மாணப் பணிகள் இரண்டிற்காக வும் 2022 மே 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக ரூபா 21,592,870 மற்றும் ஒப்பந்த கைவிடல் காலப் பகுதியில் அதாவது (2022 யூன் முதல் 2023 ஏப்ரல் வரை) இற்காக மேலதிக உரித்துக் கோரலுக்காக ரூபா 22,615,000 ஆக மொத்த தொகையான ரூபா 44,207,870 தொகை 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்தின் ஆலோசனையாளருக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிர்மாணங்கள் முறையாக திட்டமிட்டு மற்றும் தாமதக் கட்டணம் ஏற்படாத வகையில் ஆலோசனையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையை சரியாக இனங்கண்டு செலுத்துதல்களை முறைப்படுத்துவதற்கு அமைச்சு தவறியிருந்தது.	பதிலளிக்கப் படவில்லை.	உடன்படிக்கைக் கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	குருணாகல் தொழில்நுட்ப பூங்காவில் நிர்மாணிப் பதற்காக பெறப்பட்ட கடன் தொகைக்கு உரிய வட்டி மற்றும் தாமதக் கட்டணம் தவிர மூன்றாவது தரப்பினருக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 5,747,440,968 மாத்திரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	பதிலளிக்கப் படவில்லை.	உடன்படிக் கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2014 செப்டெம்பர் 11 ஆந் திகதிய இலக்கம் 1879/14 என்ற அதிவிஷேட சர்த்தமானி யின் பிரகாரம் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத் திற்காக செயற்திட்ட கம்பனியால் உத்தேசிக்கப்பட்ட முதலீடான அ.டொலர் 1,337 மில்லியன் தொகை 08 வருட காலத்தில் முதலீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்தத் தொகை முதலீட்டுக்கு ரிய கால எல்லையில் முதலீடு செய்யப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு தவறியிருந்தது.	இலங்கை அரசாங்கத்திற்காக மாநகர அபிவிருத்தி அமைச்சு (Megapolis) நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் செயற் திட்ட கம்பனிக்கிடையே கைச்சாத்திடப்பட்ட முற்தரப்பு உடன்படிக்கை யின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத் தப்படு கின்றது. இந்த செயற்திட்டத் தின் நியம தரம் தொடர்பாக jointly appointed Employers' ஆக CECB (மத்திய பொறியியல் உதாத்துணை பணியகம்) நடவடிக்கை எடுக்கின்றது.	முத்தரப்பினர் உடன்படிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	துறைமுக நகர அபிவிருத்தி முகாமைத்துவ பிரிவால் வழங்கப்பட்ட கட்டம் 1 இன் நிர்மாண செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் தொடர்பான தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தில் வீதி, பாலம் மற்றும் பூங்காவை அலங்கரிக்கும் நடவடிக்கைகள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 100 சதவீதம் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2025 சனவரி 31 இல் உள்ளவாறு வீதி முறைமையில் 74 சதவீதமும், பிரயாணிகள் பாலம் 73 சதவீதமும், பூங்கார அலங்கார நடவடிக்கைகள் 77 சதவீதமும் மாத்திரம் ஆன நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி	தற்போது முதலீட்டு மேம்படுத் தல் அமைச்சிற்கு உரியதாக காணப்பட்ட கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான கோவை நிதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளமையா ல் கோவையினைப் பரீட்சிக்காமல் செயற்திட்ட செயல் முன்னேற்றம் தொடர்பான புள்ளி விபர ரீதியான பெறுமதிகள் தொடர்பாக கருத்து தெரிவிக்க முடியாதிருந்ததை அறியத் தருகின்றோம். இது தொடர்பாக	செயற்திட்ட அறிக்கையின் கால அட்டவணை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செய்யப்பட்டிருந்தது.	நாளதுவரையாக்கப் பட்டத தகவல்கள் நிதியமைச் சில் இருந்து பெற்றுக் கொள்தல் பொருத்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் துறைமுக நகர எல்லை வரை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்த போதும் அவ்வாறு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குகின்ற முகவர் நிறுவனம் அதாவது இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் கொழும்பு மாநகர சபையுடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அமைச்சினால் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்தி டப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	முத்தரப்பினர் உடன்படிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	முத்தரப்பினர் உடன்படிக்கையின் பிரகாரம் விற்பனை செய்யக் கூடிய காணிகளில் இருந்து செயற்திட்டக் கம்பனிக்கு 116 ஹெக்டேயர் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு 62 ஹெக்டேயர் ஆக ஒதுக்கப்பட் டிருந்ததுடன் செயற்திட்டக் கம்பனிக்குரிய காணிப் பகுதி தற்போது நிர்மாணங்கள் (தற்காலிக/நிரந்தர) ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் வருமானத்தை உழைக்கக்கூடிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்ட போதும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிப் பகுதியில் எந்தவொரு நிர்மாண நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைக்கு உட்படுத்தப்படாதிருந்தமை 2025 ஏப்ரல் 25 ஆந் திகதி மேற் கொள்ளப்பட்ட கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	அபிவிருத்தி செய்யப்பட்ட காணி முதலீட்டாளர் களுக்கும் வழங்கி வருமானத் தை உழைக்கக்கூ டிய நிலைமைக்கு கொண்டுவருவ தற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் கழிவு நீர் முகாமைத்துவத்திற்காக நிரந்தரத் தீர்வொன்றை வழங்கும் வரை தற்காலிக தீர்வாக கொழும்பு நகர சபையினால் அறிவிக்கப்பட்டதுடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் உரிய நிர்மாணத்தில் ஒப்பந்தம் மூன்றிற்காக ரூபா 861,238,973 செலவினம் செய்யப்பட்டிருந்தது. அந்த தற்காலிக தீர்வின் வேலை நடவடிக்கைகள் தொடர்ந்தும் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் ரூபா 2,900,000,000 மொத்த கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டின் இறுதியின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிரந்தர தீர்விற்காக 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 27,600,486 ஆக இருந்ததுடன் தற்போது அந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய திட்டமிடல் இன்றியும் மற்றும் கொடுப்பனவு முகாமைத்துவம் இன்றியும் நிர்மாண செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் அமைச்சினால் கழிவு நீர் முகாமைத்துவத்திற்கு நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 27,600,486 ஆன செலவினம் விளைவற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	கொழும்து துறைமுக நகர செயற்திட்டத்தின் கழிவு நீர் முகாமைத்துவத்திற்காக வழங்குதல் கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதன் பிரகாரம் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற கொழும்பு நகரத்தின் கழிவு நீர் அகற்றுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தெற்கு நீர் வீதி முறைமையின் நவீனமயப் படுத்தல் மாத்திரம் இந்த செயற்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நவீனமயப்படுத்தல் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு அண்மித்திருந்தது. வடக்கு நீர் வீதி முறைமையை நிர்மாணித்தல் கொழும்பு துறைமுக நகரம் பூர்த்தி செய்யப்படும் போது அதிலிருந்து அகற்றப்படுகின்ற கழிவு நீர் போக்குவரத்திற்காக அது தனியான வசதியொன்றாக அமுல்படுத்துதல் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் பின்னர் அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு இணங்க தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் தற்காலிகமாக நிறுத்தப்படும் வரை செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரராக செயற்பட்ட தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய செயற்பாடுகள் மேடையில்	உரிய திட்டமிடலுடன் எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்ட செலவினம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

		இந்த விடயங்கள் சமர்ப்பித்து அதன் பிரகாரம் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட் டிருந்தது. இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக விரிவான விடயங்கள் உரிய கோவைகளில் பெற்றுக் கொள்வதற்காக நீதி அமைச்சில் இருந்து விசாரணை செய்தல் பொருத்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

4.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை அமைச்சின் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2025 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.